[திரு. ப. குழந்தைவேலு]

2. காலம் பாராமல் தொடர்ந்து பருத்திப் பயிர் செய்வதும், கட்டைப் பருத்தியைப் பயிர் செய்வதும், சரியான முறையில் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்காததும் இப்பூச்சிகள் வளர்வதற்கு காரணமாகும். இதை விவசாயிகளுக்கு விளக்கி ஒவ்வொரு பகுதியிலும் வருடந்தோறும் "பருத்திப் பயிரிடாத காலம்" ஒதுக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) திருவையாறு தென்னை வளர்ச்சிக் கழகம் விவசாயிகளிடம் பணம் வசூல் செய்வதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் குத்தாலத்திலுள்ள தென்னை வளர்ச்சிக் கழகம், திருவையாறு (பதிவு செய்யப்பெற்றது) என்ற நிறுவனம் தென்னை வளர்ச்சிக்குத் தேவையான இரசாயன உரங்கள், நல்ல ஆலோசனை ஆகியவை வழங்குவதாகவும் இது அரசாங்கச் சார்புடையது என்றும் சொல்லி விவசாயிகளிடம் பணம் வசூல் செய்து வருவதால் அப்பகுதி விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, திரு. செல்லம் என்பவர் தென்னை வளர்ச்சிக் கழகம் கே. ஏ. சி. திருவையாறு என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை பதிவு எண் 117 இல் நிறுவனங்களின் பதிவாளர், இந்திய கூட்டாண்மைச் சட்டம் பிரிவு 58-1 இன்படி (Registrar of Firms, Indian Partnership Act, Section 58-1) 197 ஆம் ஆண்டு திங்கள் 5-ஆம் நாள் பதிவு செய்திருக்கிறார். திரு பெனிடிக்ட் என்பவர் குத்தாலத்தில் இதனுடைய ஏஜெண்டாக இருக்கிறார். இதற்கும் அரசுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. விவசாய இலாகாவோ அல்லது விவசாய இலாகா ஊழியர்களோ இந்நிறுவனத்தின் செயல்முறைகளை சிபாரிசு செய்வதில்லை.

3-4-1978 அன்று வேளாண்மைத்துறையைச் சார்ந்த பயிர் பாதுகாப்பு நிபுணர் குத்தாலத்திலுள்ள இக்கழகத்தின் அலுவலகத்தை பார்வையிட்டார்கள். அச்சமயம் அங்கு எந்தவிதமான பூச்சி மருந்துகளும், உரங்களும் காணப்படவில்லை. தவிர அப்பகுதியில் மேற்கூறிய அதிகாரி விசாரணை செய்ததில் இந்த தென்னை வளர்ச்சிக் கழகம் நாட்டு உரங்களை மட்டுமே விநியோகித்தது என்றும் இரசாயன உரங்கள் ஒன்றும்விநியோகிப்

பதில்லை என்றும் தெரியவந்தது. இதுவரை வந்த தகவல்களின்படி இத்தென்னை வளர்ச்சிக் கழகம் இரசாயன உர கட்டுப்பாடு உத்தரவையோ அல்லது பூச்சி மருந்துகள் சட்டத்தையோ மீறியதாகத் தெரியவில்லை.

குத்தாலத்தில் உள்ள இந்த தென்னை வளர்ச்சிக் கழகத்தின் ஏஜென்டாக உள்ள திரு பெனிடிக்ட் என்பவர் பதினொரு விவசாயிகளிடம் தொடர்பு கொண்டு ரூ. 1635 வசூல் செய்துள்ளார் என்று தெரிய வந்தது. காவல் துறையினரை தொடர்புகொண்டதில், திரு பெனிடிக்ட் என்பவர் மீது பொது மக்களை ஏமாற்றியதாக வழக்கு ஒன்று பதிவு செய்திருப்பதாகவும் அது புலனாய்வில் இருக்கிறது என்றும் தெரிய வந்தது. இக்கழகத்தின் நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாக கூர்ந்து கவனிக்குமாறு மாவட்ட வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர் (உரக்கட்டுப்பாடு) மற்றும் துணை வேளாண்மை அலுவலர் (பயிர் பாதுகாப்பு) ஆகியோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள தென்னை சாகுபடியாளர்கள் இம்மாதிரியான அங்கீகரிக்கப்படாத, போலி நிறுவனங்களின் பிடியில் சிக்காமல் தங்கள் தேவைக்கு வேளாண்மைத்துறை அலுவலர்களையே அணுகுமாறு விரிவான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) கல்லக்குடி கிராமத்திற்கு குடிநீர் வழங்கல் குறித்து அப்பகுதி மக்கள் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, எஸ். சதாசிவம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் இருக்கையில் இல்லாததால் திரு. சதாசிவம் அவர்கள் அதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

திரு. எஸ். சதாசிவம்: தலைவரவர்களே, திருச்சி ஜில்லா கல்லக்குடி கிராமத்திற்கு 15 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கும் குடிநீர் பிரச்சினைக்காக அப்பகுதியில் உள்ள பொது மக்கள் அனைவரும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டது பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, கல்லக்குடி கிராம வளர்ச்சி குழு 19-3-1978 நாளிட்டக் கடிதத்தில் போதிய அளவு குடிநீரை ஒழுங்காக வினியோகம் செய்யவும்,